தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 556

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 15உ வெள்ளி (27—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 16உ சனி (28—4—56) [இதழ் 27(

ரூ. 30 அபராதம் அல்லது 30 நாள் சிறைவாசம்!

பம்பாய், ஏப். 26—

பூனை ஒன்றைக் கொன்றமைக்காக பம்பாய்வாசி ஒருவருக்கு 30 ரூபாய் அபராதம்—கட்டத்தவறினால் 30 நாள் கடுங்காவல் சிறைவாசம் என்று தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

பிரம்பு ஒன்றினால் ஒருவர் பூனையைத் தாக்கினாராம். காரணம், அது அவர் வீட்டில் உணவுப் பொருள்களைத் திருடிவிட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

தன் கரும் புள்ளிகளை சிறுத்தை மாற்றிக்கொள்ளுமா?

'ஜாதி அலுவலில் கலந்துகொள்ளாதீர்'

'கலப்பு மணம் என்ற மட்டுடன் நின்றுவிடாதீர்'

'ஜாதியற்றத் திருமணத்தை இலட்சியமாகக் கொள்ளுங்கள்'

'ஜாதி சங்கங்களிடம் எந்தச் சலுகைக்கும் கையேந்தாதீர்'

காங்கிரஸ் கட்சிக்கு தேபர் இதோபதேசம்!

தனது அரசியல் ஆதிக்கத்திற்கு மறுவாழ்வு தரும் ஒரு சிறந்த ஏற்பாடாக, ஜாதி வேற்றுமைக்கு தினம் தினம் புதிய உயிர் கொடுக்கும் பெரும் பணியைத் தொடர்ந்து செய்துவரும் காங்கிரஸ் கட்சிக்கு, அதன் தலைவர் தேபர், ஜாதியத் தீமையை ஒழிப்பதற்கான முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இதோபதேசம் செய்திருக்கிறார்.

காந்தி கிராமத்தில், ஜாதி ஒழிப்புப்பற்றி, அவரிடம் கேட்கப்பட்டது அதற்கு அவர் பின்வரும் நடைமுறைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை ஆட்சி, காங்கிரஸ் கட்சியின் கைக்கு மாறிய அடிப்படை அவலட்சணத்தையும், திரு-கொச்சி ஆட்சியில் காங்கிரஸ் ஏறினதற்கும், இறக்கப்பட்டதற்கும் அடிப்படையாக இருந்த பெருந் தீமையையும் நன்கு தெரிந்திருப்பவர்கள், தேபர் இதோபதேசத்திற்கு காங்கிரஸ் கட்சி எந்த அளவு மதித்து நடக்கப் போகிறது என்பதை அறிந்தே இருக்கிறார்கள்.

சுணங்கின் வாலை நிமிர்த்த முடியுமா? சிறுத்தை, தன் தேகத்தில் உள்ள கரும்புள்ளிகளை மாற்றிக் கொள்ள முன்வருமா? அதே போன்றதுதான், ஜாதி ஒழிப்பையும் காங்கிரஸ் தனது இலட்சியமாகக் கொள்ளும் என்பதும்!

தேபர் கூறுகிறார், காங்கிரஸ் நிர்மாண ஊழியர்களுக்கு!

"ஜாதி அலுவல்களில் கலந்து கொள்ளாதீர்"

"கலப்பு மணம் என்று மட்டுமே எண்ணாமல், ஜாதியற்றத் திருமணம் எனக் கண்ணோட்டம் பெறுங்கள்"

"எந்த ஒரு ஜாதி சங்கத்திடமிருந்தும், எவ்வித சலுகையும் ஒப்பாதீர்—ஏற்காதீர்"

"ஜாதிய சங்கம் தரும் சலுகையை ஒருமுறை பெற்றுக் கொள்ளும் பட்சத்தில், நீங்கள் (காங்கிரஸ்) அதற்குப் பிரதியாக ஏதாவது அந்த ஜாதிக்குச் சலுகைக்காட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்"

அப்படியா?

புதுடில்லி, ஏப். 26—

"இந்தியாவிலுள்ள எந்த நீதி மன்றத்திலும், அலுவலகத்திலும் 14 மொழிகளில் ஏதேனுமொன்றில் மனுக்களைத் தரலாம்; இது குறித்துச் சந்தேகம் கொள்ளத் தேவை இல்லை" என்று, மக்கள் சபையில் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் கூறியுள்ளார்.

மராட்டியத் தாய்மாரின் போர்க்கோலம்

பம்பாய் கோரி படைவரிசை திரளுகிறது

திருமதி காட்கில் உள்ளிட்ட பதின்மர் கைது

பூனா, ஏப். 26—

சம்யுக்த மராட்டியம் கோரி நடைபெறும் கிளர்ச்சிகளில் தாய்மார்கள் கணிசமான அளவு கலந்துகொண்டு, தங்களின் தாயகப் பற்றை எடுத்துக்காட்டி வருகின்றனர்.

தோழர் காட்கில் அவர்களின் துணைவியாரான திருமதி அனுசூயாபாய் காட்கில் அவர்களும், இன்னும் ஒன்பது பெண்மணிகளும், இன்று காலை 144 தடையை மீறி 'சத்தியாக்கிரக'த்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

திருமதி காட்கில், இந்த பெண் தொண்டர் படைக்குத் தலைமை வகித்து நகரின் முக்கிய வீதிகள் வழியாக அணிவகுப்பு ஊர்வலம் நடத்திய பின்னர் 'பம்பாய் மராட்டியருக்கே; சம்யுக்த மராட்டியம் வேண்டும்' என்று கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

சம்யுக்த மராட்டியக் கோரிக்கைக்காக நடைபெறும் கிளர்ச்சியில், இன்று கைது செய்யப்பட்ட பெண்கள் கோஷ்டி, ஐந்தாவது என்று தெரியவருகிறது.

நூல் நூற்பவர் வாழ்க்கைத்தர வளர்ச்சிக்குத் தடை விதிப்பா?

அம்பர் இராட்டையை ஏற்பதின் உட்பொருள் என்ன?

அம்பர் இராட்டையிலும் கூடிய பயன்தரும் இராட்டையை ஏற்க மறுப்பது நியாயமா?

சந்திக்கத் தயாராம்!

மலேயா கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் சின்பெங்கை தான் மீண்டும் சந்தித்து, நெருக்கடியைத் தீர்க்க முயற்சி செய்யத் தயார் என்று, மலேயா முதலமைச்சர் தெங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளாராம்.

கிராமக் கொல்லர், தச்சர்களின் திறத்தைக் கூட்டுவதா? பின்தங்கிக்கிடக்க விட்டுவிடுவதா?

நூல் நூற்புக் கருவி வளர்ச்சியில் காங்கிரஸ் தலைவரின் கருத்துக் குழப்பம்!

ஆதரித்தும், கண்டித்தும் வெகுவாகப் பலராலும் பேசப்படுகிற 'அம்பர் சர்க்கா' குறித்து அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேபார் அண்மையில் கோவை வந்திருந்தபோது குறிப்பிட்ட கருத்துக்கள் கவனத்திற்குரியனவாகும்.

கோவையில் டி. பாலசுந்தரம் என்பார் 16 கதிர்கள் கொண்ட புதிய அம்பர்சர்க்கா ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். அவரிடம் பேசுகையில், தேபர், 'இந்தப் புதிய சர்க்கா, நகர்ப்புறங்களுக்கு ஏற்றதாக இருக்கமுடியும்; ஆனால், கிராம மக்கள் ரூ. 100 முதல் ரூ 150 வரை உள்ள சிறியதொரு சர்க்காவையே விரும்ப முடியும்', என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கூறியதாவது:— 'பம்பாயைச் சேர்ந்த சுந்தரதாஸ் என்பார் எட்டுக்கதிர்கொண்ட அம்பர் சர்க்கா ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். இதனை, தொழில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி பெரிதும் விரும்புகிறார். இந்த சர்க்காவின் விலை, அம்பர் சர்க்காவின் விலை எவ்வளவோ அவ்வளவே தான். அதேபோல, நாகபுரியில் உள்ள ஆலை ஒன்று, முழுவதும் மரத்தினால் செய்யப்படும் ரூ. 125 விலையுள்ள அம்பர் சர்க்கா ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறது; இதுவும் எட்டுக்கதிர்கள் கொண்டதே!

அம்பர் சர்க்கா அபிவிருத்திக்காக, தோழர் பாலசுந்தரம் மேற்கொண்டுள்ள பரிசோதனைகளும். அவற்றின் விளைவுகளும் எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. அவர்

(4-ம் பக்கம் பார்க்க)

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம்

நிலைபற்றி ஒரு விளக்கம்

புதுடில்லி, ஏப். 26—

ரூ. 70 கோடி செலவில் இயக்கப்படும் நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்ட வேலைகள் நம்பிக்கையூட்டுவதாக உள்ளதாம்.

இப்போது 20 'பம்பு'கள் இயங்குகின்றனவாம்; நீரின் அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி, எவ்வித ஆபத்துமின்றி கரியை வெட்டியெடுப்பது இயலக்கூடியதாக அமையுமென மத்திய உற்பத்தி இலாகாவினருக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாம்.

தண்ணீர் இறைப்புவேலை பலனளித்திருப்பதால் மேலும் 9 பம்புகளைப் பொருத்தி அதன் முழுப் பலனை அறியவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இப்பரிசோதனைகளின் பலனை அடிப்படையாகக் கொண்டு அத்திட்டத்தை மேற்கொண்டு நடத்துவதற்கு அடுத்த சில நாட்களில் முக்கிய முடிவுகள் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

'ஜாதீய சங்கங்கள் வேண்டாம்'

எஸ். எஸ். இராமசாமியாரின் 'அமைச்சர்' கண்ணோட்டம்!

"வன்னியர்கள் இப்போது அரசியல், படிப்புத் துறையில் முன்னேறி வருகிறார்கள். இனிமேல் சமூகத்தின் பெயரால் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. பள்ளிக்கூடம் நடத்துவது போன்ற வேலைகளுக்காக இனிமேல் அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்படுத்த வேண்டாம். ஏன் என்றால் அரசாங்கமே வன்னியர் முன்னேற்றத்துக்காக பாடுபட்டு வருகிறது."

இவ்வாறு, அமைச்சர் எஸ். எஸ். இராமசாமி (படையாட்சி) அவர்கள் சென்னை பார்க் டவுன், எட்டியப்ப நாயகர் வன்னியர் சங்க ஆரம்பப் பள்ளியின் 65-வது ஆண்டுவிழாக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

பதனீரிலிருந்து சர்க்கரை உற்பத்தி?

நீரா (பதனீர்) விலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, தனது நடைமுறை முயற்சியை இன்று முதல் துவங்குகிறது. இத்தொழில்கம், கிருஷ்ணா மாவட்டத்தில் உய்யூர் என்ற இடத்தில் தனி ஒருவரால் நிறுவப்பட்டது.

'தமிழ்நாடு எனப் பெயரிடுக'

மக்கள் சபையில் வல்லத்தரசு கோரிக்கை

"கடந்த காலத்தில் வழங்கப்பட்டதுபோலவே இப்போதும், சென்னை மாநிலத்திற்கு 'தமிழ் நாடு' அல்லது 'தமிழகம்' எனப் பெயரிடவேண்டும்.

"தமிழ் மாநிலத்தை ஒட்டியுள்ள பிரதேசங்கள் சிலவற்றில் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரதேசங்கள் எந்த மாநிலத்துடன் சேர்ந்திருப்பது என்ற எல்லைகளை நிர்ணயிக்க ஒரு எல்லைக் 'கமிஷன்' நியமிக்கவேண்டும்"

என்று, தோழர் முத்துசாமி வல்லத்தரசு மக்கள் சபையில், மாநில புது அமைப்பு மசோதா குறித்துப் பேசுகையில் . எடுத்துரைத்திருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க.வின் இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27—4—'56 வெள்ளி

ரோக்கப் பரிசு!

'சொல்வதை எல்லாம் செய்தார்' என்று காந்தியாரைப் பெருமைப்படுத்துவார்கள். சிலர், 'செய்ததை—தன்னால் செய்ய முடிந்ததை மட்டுமே அவர் சொல்வார்' என்றும் விளக்கம் கூறுவார்கள். 'எப்படியானாலும், காந்தியார், தனது சொல்லுக்கும் செயலுக்குமிடையில், வேற்றுமைகள் வேர்விடாது பார்த்துக் கொள்பவராயிருந்தார்; அதனால் பெருமையும் பெற்றார்' என்பதைப் பலரும் ஒப்புவர்.

அந்தப் பெருமைக்குரிய காந்தியாரின் நிழலிலே வளர்ந்தவர்கள்தான், இன்றைய ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கும் காங்கிரஸ் தலைவர்கள். இவர்களை, காந்தியாரின் வாரிசு என்று அழைத்துப் பெருமை கொள்ள நினைப்பவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால் டெல்லிப் 'பெரிய மனிதர்'கள், தங்களின் சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பு அற்றுப் போகச் செய்வதையே பல்வேறு ஆட்சித் துறைகளிலும், தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள் என்பது, வெள்ளிடை மலையாகும்.

'இந்தியை எவர்மீதும் திணிக்கமாட்டோம்' என்ற 'உறுதி மொழி' வழங்காத வடநாட்டுத்தலைவர்களே கிடையாது. குடியரசுத் தலைவர், பிரதமர், உள்நாட்டு அமைச்சர் என்று துவங்கி, மந்திரிகளாகியிருப்பதால் மட்டும் மக்களுக்கு அறிமுகமாகியிருக்கிற மனிதர்கள்வரை, 'இந்தியைத் திணிக்கமாட்டோம்—கட்டாயப் படுத்தமாட்டோம்' என்ற சொற்களை உதிர்க்காமலிருப்பதில்லை, மக்கள் மத்தியிலும் சரி, மக்கள் சபை என்ற புனிதமான பெயரோடு இயங்கும், மன்றத்திலும் சரி, இந்த 'உறுதி மொழி'கள் சரமாரியாக வழங்கப்படுகின்றன.

ஆனால், பரிதாபத்திற்குறிய அந்தப் 'பெரிய மனிதர்'கள், தங்களின் நடைமுறைப் போக்கு தங்கள் 'உறுதி மொழி'யின் பொருளை கேலிக்குறியதாக்குகிறது என்பதை மக்கள் தெரிந்துகொள்ளமாட்டார்கள் என அவர்கள் எண்ணுகிறார்கள். அதில்தான் அவர்களது நெஞ்சத்தில் புதைந்து கிடக்கும் வஞ்சகம் வெட்டவெளிச்சமாகத் தெரிய வருகிறது.

இந்தியைத் திணிப்பதற்கென நியமிக்கப்பட்ட ஒரு குழு இன்னும் தனது 'சிபாரிசு'களைத் தெரிவிக்கவில்லை. இடைக்கால அறிக்கை ஏதும் தந்திருப்பதாகவும், நமக்குத் தகவல் இல்லை. குழு அறிக்கை தருவதற்கு முன்பாகவே, இந்தியை நிர்வாகத்தின் பல்வேறு துறைகளிலும் வேகமாகபுகுத்தி வருகிறது டில்லி சர்க்கார். இந்த குழு நியமித்ததின் அடிப்படை நோக்கத்தையே சந்தேகிப்பதற்குத் துணைபுரிவதாகும் என்று, காங்கிரஸ் சார்பு ஏடுகள் கூட எடுத்துரைத்திருக்கின்றன.

நாமும் அவ்வப்போது அந்த ஏகாதிபத்தியப் போக்கினை வன்மையாகக் கண்டித்து வந்திருக்கிறோம். ஆனாலும் டில்லியாளர்கள், தங்கள் போக்கை மாற்றிக்கொண்டதாகக் காணோம்.

டில்லி சர்க்காரின் பல்வேறு நிர்வாகத் துறைகளிலும் பணிபுரிவோர் இந்தியைக் கட்டாயமாகக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று, மறைமுகமாக நிர்ப்பந்தித்து வருகின்றனர் டில்லி ஆட்சியாளர்கள்.

அலுவலக நேரத்திற்குப் பின், இலவசமாக, சர்க்கார் செலவில் இந்தி கற்றுத்தரப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதுகோரிய பலனைத் தரவில்லையாம். ஊழியர்களைக் கவரவில்லையாம். இப்போது அலுவலக நேரத்திலேயே, இந்தி கற்றுத்தரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அலுவலக நேரத்தில் ஒரு பகுதியினை, இந்தி கற்றுக்கொள்ள ஊழியர்கள் பயன்படுத்துவார்களானால், அந்த நேரத்தில், தாங்கள் கவனிக்க வேண்டிய வேலைகள் தடைப்படும். அதாவது, சில மணி நேர பொதுவேலை பாதிக்கப்படும். இதனால், மக்களுக்கு, இதர நஷ்டங்களுடன், பொருள் நஷ்டமும் ஏற்படும் என்பது உணரவேண்டிய ஒன்றாகும். மக்கள் வரிப் பணம், இந்தி வெறியர்களின் அவசரமான சுயநல நோக்கத்திற்கு பாழடிக்கப்படுகிறது.

மேலும், இந்தி பரீட்சைகளில் தேறுவோருக்கு ரொக்கப் பரிசு வேறு தரத் திட்டமிட்டிருக்கிறார்களாம். ஊழியர்களின் பற்றாக்குறை வாழ்க்கை நிலையை மனதில் கொண்டு, அவர்களுக்கு ரொக்கப் பரிசு பெற வாய்ப்புத் தருவதாகக் கூறுவதின் மூலம், ஊழியர்களை ஏளனம் செய்கிறார்கள் சர்க்கார் என்று சிலர் விளக்கம் கூறினால் அது முற்றிலும் தவறானதல்ல.

இத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் டெல்லி வாழ் 'பெரியமனிதர்'கள், இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று கூறுவதில் நேர்மை கடுகளவும் இல்லை என்பது தெளிவு.

இந்தித் திணிப்புக் குழு, வெறும் கண்துடைப்பு என்பதையும், இந்த அவசர அவசரமான நடவடிக்கைகள் அம்பலப்படுத்துகின்றன.

வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் எத்தனைதான் ரொக்கப்பரிசுத் திட்டங்கள் திட்டி இந்தி ஆதிக்கத்தின் மூலம் 'ஏக இந்தியா'வை நிலைபெறச் செய்துவிடலாமென எண்ணினாலும் அதுவெறும் பகற்கனவுதான் என்பதை அவர்களுக்கு உணர்த்த விரும்புகிறோம்.

இந்தியாவிலுள்ள விமான கிளப்புகளுக்கு இவ்வருடத்தில் மத்திய சர்க்காரிடமிருந்து மொத்தம் சுமார் ரூ. 17,50,000 சகாயத் தொகையாகக் கிடைக்கும். 1954-55ம் ஆண்டில் இவ்வகையில் அவை பெற்ற தொகை மொத்தம் ரூ. 10 இலட்சம் ஆகும்.

இந்தி கற்போருக்கு ரொக்கப் பரிசு!

சர்க்கார் ஊழியரின் ஏழ்மை நிலை ஏளனம் செய்யப்படுகிறதா?

டில்லி ஏகாதிபத்தியத்தின் இழிகுணம்

சென்னை, ஏப். 25—

இந்தியைத் திணிக்க, டில்லி ஏகாதிபத்தியவாதிகள் எத்தனை கீழ்த்தரமான முறைகளைக் கையாளுகின்றனர் என்பதற்கு எடுத்துக் காட்டுகள் எத்தனையோ உண்டு. இதோ ஒன்று!

டில்லி சர்க்கார் அலுவலகங்களில் பணிபுரிவோர் இந்தி கற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காக எத்தனையோ சலுகைகளை வாரி வழங்கினர், சர்க்கார்! அவை எல்லாம் கோரிய பலனைத் தரவில்லை போலும்! இப்போது ரொக்கப் பரிசு தருவதாக, விளம்பரப்படுத்தியிருக்கின்றனர்.

இந்தி கற்றுக்கொள்ளும், சர்க்கார் ஊழியர்களுக்கு ரொக்கப் பரிசு கிடைக்குமாம்!

தங்களது பற்றாக்குறை வாழ்க்கை நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, அதனை ஏளனம் செய்வதுபோல டில்லி சர்க்கார் நடந்துகொள்வதாக சர்க்கார் ஊழியர் கருதுகின்றனராம்— இந்த ரொக்கப் பரிசுத் திட்டத்தை!

அலுவலக நேரத்திலேயே, இலவசமாக இந்தி போதிக்கப்படுமாம்! இந்தப் படிப்பிற்காக ஆகும் செலவு முழுவதையும் டில்லி சர்க்காரே ஏற்றுக் கொள்ளுமாம்! அலுவலக நேரத்திற்குப் பிறகு இந்தி வகுப்பு நடத்தினால் சர்க்கார் ஊழியர்கள் வகுப்பிற்கு வரமாட்டார்கள் என்பதினாலேயே, வகுப்புகள், அலுவலக நேரத்திலேயே ஏற்பாடு செய்யப்படுகின்றனவாம்.

சென்னை மாநிலத்தில் உள்ள டில்லி சர்க்கார் அலுவலகங்களில் ஏற்கனவே இந்த இந்தி வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டனவாம்—கடந்த ஏப்ரல் 16-ந் தேதி முதல்!

அகில இந்திய வானொலி நிலையம் சுங்க வரி இலாகா, வருமான வரி இலாகா, தலைமைக் கணக்காயர் நிலையம் இங்கெல்லாம் வகுப்புகள் நடைபெறுகின்றனவாம்!

இந்தி கற்போருக்கு ரொக்கப் பரிசு தருவது என்ற திட்டம், டில்லியின் இழிந்த மனப்போக்கை எடுத்துக் காட்டவில்லையா?

தொழிலியல் பள்ளிகள் துவக்க அனுமதியாம்!

சென்னை, ஏப். 23—

இவ்வாண்டு ஜூலைத் திங்கள் முதல் 5 புதிய தொழிலியல் பள்ளிகளைத் துவக்க சென்னை சர்க்கார் அனுமதியளித்திருக்கிறார்கள். இப்புதிய பள்ளிகள் பாளையங்கோட்டையிலும் (நெல்லை மாவட்டம்), விருதுநகரிலும் (இராமநாதபுரம் மாவட்டம்), நாகப்பட்டினத்திலும் (தஞ்சை மாவட்டம்,) கடலூரிலும் (தென்னாற்காடு மாவட்டம்) கண்ணனூரிலும் (மலபார் மாவட்டம்) நிறுவப்படுமாம்.

துவக்கத்தில் இப்புதிய தொழிலியல் பள்ளியில் 20 பேருக்கு கொல்லுவேலை, தச்சுவேலை, மரவேலை முதலியவற்றில் பயிற்சித் தரப்படுமாம். மனுச் செய்வோர் 3-வது படிவம் தேறியிருக்க வேண்டுமாம். அவர்களுக்கு இரண்டாண்டு காலத்திற்கும் உதவிச் சம்பளம் தரப்படுமாம்.

இரண்டாண்டு பயிற்சிக்குப் பின்னர் அவர்களுக்கு வேலை அளிக்கவும் சென்னை சர்க்கார் திட்டமிட்டுள்ளனராம். 2-வது திட்டத்தில் சிறிய கைத்தொழில்கள், குடிசைத் தொழில்கள் துவக்கப்படும்போது அவர்களுக்கு வேலைத் தரப்படுமாம்.

ரூ. 49-லட்சம் மதிப்புள்ள இந்தியத் துணிகள்

பர்மாவுக்கு ஏற்றுமதியாகும்

பர்மா சர்க்கார், இந்தியத் துணிகளை வாங்கவிருப்பம் தெரிவித்துள்ளனர். பர்மாவுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, மொத்தம் சுமார் ரூ. 49 இலட்சம் மதிப்புள்ள இந்தியத் துணிகள் ஒதுக்கப்படும்.

ரூ. 6,54,00,000!

இயற்கை மருத்துவ முறைகளுக்கு செலவிடப்படுமாம்!

புதுடில்லி, ஏப். 24—

ஆயுர்வேதம், யூனானி, இயற்கை மருத்துவ முறைகளுக்கு 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இந்தியப் பேரரசினரும் மாநில சர்க்கார்களும் ரூ. 6,54,00,000 செலவிடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

சுசேதா கிருபளானி தேர்தல் செல்லாதாம்

புதுடில்லி, ஏப். 25—

பிரஜா - சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த சுசேதா கிருபளானி அம்மையார் மக்கள் சபையில் தனது இடத்தை இழந்தாராம். அவர் மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லத்தக்கதல்லவென்று மூவர் கொண்ட தேர்தல் 'டிரிப்யூனல்' தீர்ப்பளித்ததாம்.

'ஆங்கில மொழி அறிவு இந்தியாவிற்கு இன்னும் அவசியமே'

மாநிலங்கள் சபையில் குன்ஸ்ரு பேச்சு

புதுடில்லி, ஏப். 25—

"பல்கலைக் கழக மாணவர்கள், ஆங்கிலத்தில் போதுமான அறிவு பெற்றிருக்க வேண்டும்; ஏனெனில், அவர்கள் நவீன கால சிந்தனை வளர்ச்சி விஞ்ஞான, தொழில் நுணுக்க ஆராய்ச்சி இவை குறித்து அறிந்துகொண்டாக வேண்டும்.

"மேலும், ஆங்கிலம், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் படித்தவர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளவும், அதன் மூலம் இந்தியாவின் ஒற்றுமையை பலப்படுத்தவும் வெகுவாகப் பயன்பட்டு வருகிறது. உண்மையில் ஒரு அன்னிய மொழியை ஒரு நாடு தன் பல்வேறு பகுதிகளுக்குள்ளும் தொடர்புகொள்வதற்காக உபயோகித்துக்கொள்வது என்பது பெருமைக்குரியது அல்ல; ஆனால், நாம் உண்மைகளை எண்ணிப் பார்த்தாக வேண்டும். நாட்டின் பல்வேறு பகுதியினரும் ஒருவரோடொருவர் உரையாட இந்தியை உபயோகிக்கும் அளவை—இந்தி வளரும்வரை, நாம் ஆங்கிலத்திற்கு அதற்குரிய இடம் தந்தாக வேண்டும்," என்று, டாக்டர் எச். என். குன்ஸ்ரு மாநிலங்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சௌராஷ்டிரத்தில் எதிர்ப்புக் கிளர்ச்சி

போலீசார் போக்கை மாற்ற 'கொரில்லா' முறை

ராஜ்கோட், ஏப். 24—

சௌராஷ்டிர மாநிலத்தில் அபிவிருத்தி வரி விதிப்பதை எதிர்த்து தொடர்ந்து விவசாயப் பெருமக்கள் கிளர்ச்சி நடத்தி வருகின்றனர்.

முன்கூட்டியே போலீசாருக்கு அறிவித்துவிட்டு மறியல், ஆர்ப்பாட்டம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதினால், போலீசார், இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை முன்கூட்டியே கைது செய்து, மறியலைத் தடுத்து விடுகின்றனராம்.

எனவே, இனி இதிலிருந்து தப்பி மறியல் நடைபெறச் செய்வதற்காக, அபிவிருத்தி வரிவிதிப்பு எதிர்ப்பு சமிதி 'கொரில்லா' தந்திரங்களைக் கையாளப் போவதாக அறிவித்திருக்கின்றனர்.

இடம், நேரம், நபர் எல்லாம் அறிவிக்கப்பட்டால்தானே போலீசார், மறியல் நடைபெறாமல் செய்ய முடிகிறது? அறிவிக்காதிருந்துவிட்டால்?

இதற்கிடையில் காங்கிரஸ் 'கண்ணியவான்'கள், கிளர்ச்சியில் சேர வேண்டாமென விவசாயிகளைத் அண்டி வருகின்றனராம்.

திருவிழாவில் நேரிட்ட விபரீத சம்பவம்

தேர்ச் சக்கரத்தில் சிக்கிச்சிதைந்த பரிதாபம்

மைசூர், ஏப். 25—

மைசூரிலிருந்து 40 மைல் தொலைவிலுள்ள பிலிகிரிரங்கன் குன்றில் நடைபெற்ற தேர்த் திருவிழாவில் இருவர் மாண்டதாகவும், மூவர் பலத்த காயமடைந்திருப்பதாகவும் தெரிகிறது.

தேர் புறப்பட ஆரம்பித்ததும், தேருக்கு முட்டுக்கட்டை போடுபவர் தேர்ச் சக்கரங்களில் சிக்கிச் சிதைந்து இறந்து விட்டதாகக் கூறப்படுகிறது. தேரை நிறுத்துவதற்குப் பெருமுயற்சி செய்துகொண்டிருந்தபோது தேரின் மீதிருந்த ஒருவர் கீழே விழுந்து மக்கட் கூட்டத்தின் நெரிசலில் மிதிபட்டு இறந்தாராம்.

கூட்டத்தினர் தேர்மீது வீசி எறிந்த பழங்களையும், காசுகளையும் பொறுக்க முயற்சிக்கையில் தேர் ஏறி மூவர் பலத்த காயமடைந்தனராம்.

உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிர்ப்பு?

மண்ட்காமரி, அலபாமா, ஏப். 24—

'பஸ்' போக்குவரத்துகளில் இனபேதம் கூடாதென்று அமெரிக்க 'சுப்ரீம்' நீதிமன்றம் உத்திரவிட்டிருப்பதைத் தொடர்ந்து, இரு இனத்தவர்களையும் பாகுபாடின்றி உட்காரவைத்துக் கொள்ளும் பஸ்களுக்கு நகர போலீஸ் கமிஷனரால் எச்சரிக்கை ஒன்று விடுவிக்கப்பட்டுளது. 'நீண்டநாளைய இனவேற்றுமை முறையை மீறும் பிரயாணிகளையும், டிக்கெட் கொடுப்போரையும் கைது செய்ய சொந்த அதிகாரத்தில் உத்தரவிடுவேன்; உள்ளூர் வழக்கில் அவ்வாறு தீர்ப்புகூறப்பட்டால்தான் மதிக்கப்பட முடியும்,' என்று அவர் கூறியுள்ளார்.

திரு-கொச்சியில் இந்தி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

இந்தி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று திரு-கொச்சி மாநிலத்தில் துவக்கப்பட்டிருக்கிறதாம். டில்லி சர்க்கார் இந்தப் பள்ளிக்காக 1956—57-ம் ஆண்டிற்கென ரூ 21,899 வழங்கியிருக்கிறார்களாம்.

இந்தத் தகவல் மக்கள்சபையில் தரப்பட்டிருக்கிறது.

போட்டி கோஷ்டிகள் மோதுதலைத் தவிர்க்க கண்ணீர்ப்புகை பிரயோகம்

மகா பஞ்சாப் முன்னணியின் ஆகாத போக்கு

அமிர்தசரஸ், ஏப். 25—

இங்கு நேற்று, மூன்று வேறு இடங்களில் போட்டி கோஷ்டிகள் கைகலப்பில் ஈடுபட்டதை ஒட்டிப் போலீசார் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்திருக்கின்றனர்.

மகாபஞ்சாப் முன்னணியைச் சேர்ந்தவர்களெனப்படும் சுமார் 500 பேர்கள் முதன் மந்திரி பிரதாப் சிங் கெய்ரானுக்கு நகர மண்டலத்தில் ஒரு வரவேற்பளிக்கப்படுகையில், கூடிநின்று ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

முதன் மந்திரி மண்டபத்தை விட்டு வெளியேறியதும், இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மண்டபத்துள் நுழைந்து, கெய்ரான் மந்திரி சபைக்கு எதிராகவும், மண்டல ஏற்பாட்டிற்கு எதிராகவும் கோஷங்களை எழுபினராம். அங்கு ஏற்கனவே இருந்த அகாலியரும், காங்கிரசாரும், மந்திரி சபையை ஆதரித்தும், மண்டல ஏற்பாட்டை வரவேற்றும் எதிர்க் கோஷங்கள் கிளப்பினராம். உடன் இருசாராரும் மோதிக்கொள்வதைத் தவிர்ப்பதற்காக போலீசார் கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்தனராம்.

இதுபோல, வேறு இரு இடங்களிலும் இந்த போட்டிக் கோஷ்டிகள் மோதிக்கொண்டபோது கண்ணீர்ப் புகை பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய சர்க்கார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாடு முழுவதிலும் மொத்தம் 125 - கிராம விஞ்ஞான நிலையங்கள் அமைக்க உத்தேசித்துள்ளனர்.

க. அன்பழகன்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

ஆலங்குடி :

20—4—56 மாலை 6 மணியளவில், புதுக்கோட்டையை அடுத்த ஆலங்குடி திருச்சி மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளியில் திரு. விருத்தகிரீச்சுவரர் தலைமையில் பள்ளி ஆண்டு விழா நிகழ்ந்தது. தோழர் புலவர் அறிவுடைநம்பி தமிழ்ப் பண்பாடு குறித்து விளக்கிப் பேசினார். இறுதியில், பேராசிரியர் க. அன்பழகன் தமிழின் நிலை குறித்தும், தமிழர் வாழ்வு குறித்தும், குறள்நெறித் தழைக்க வேண்டிய அவசியம் குறித்தும் விளக்கவுரை தந்தார். மாணவர் மன்றச் செயலாளர் அக்பர் நன்றி கூறினார்.

நீடாமங்கலம் :

தஞ்சை மாவட்ட நீடாமங்கலம் தி.மு.க. கூட்டம் 21-4-56 மாலை 6 மணியளவில், திரு. சி. கிருட்டிணமூர்த்தி தலைமையில் நிகழ்ந்தது. தோழர் சுந்தரேசன் இயக்கப் பண் பாடினார். தோழர் சிவஞானம் சிறிது நேரம் பேசியதும் தோழர் புலவர் அறிவுடை நம்பி திராவிட நாடு பிரிவதற்கான காரணங்களையும், மொழியின் அடிப்படையிலும், பொருளாதார அடிப்படையிலும், வடநாடு தென்னாட்டைச் சுரண்டுகின்ற நிலையையும், பண்பாட்டின் அளவையும் எடுத்துக்காட்டிப் பேசினார்.

இறுதியில் பேராசிரியர் க. அன்பழகன் தி மு. கழகத்தின் இலட்சியங்களை—ஏழு ஆண்டுகளாக அது நிகழ்த்திவரும் தொண்டினை முதலில் விளக்கி, பிப்ரவரி 20-ம் நாள் நிகழ்ந்த சர்வ கட்சிக் கூட்டணியின் வேலைநிறுத்தம் வெற்றி பெற்றக் காரணத்தை சுட்டிக்காட்டியும் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க மனம் வராத நிலையினர் இன்றைய ஆளவந்தார் என்பதையும் விளக்கியும், இம்மாதிரி முறையெல்லாம் நீங்கி உண்மையில் நாம் உரிமை பெற வேண்டுமானால் திராவிட நாடு பெற வேண்டும்—அதற்கானத் திட்டங்களை தீட்டித்தர திருச்சியில் மாநில மாநாடு நிகழப்போவதை விளக்கியும் விரிவுரை ஆற்றினர். கழகச் செயலாளர் நன்றி கூறினார்.

அம்பர் சர்க்கா, கைத்தறி மீது ஆலை முதலாளிகள் சங்கத் தலைவர் பாய்ச்சல்

"அம்பர் சர்க்காவிற்கு ரூ. 100 கோடியும், கைத்தறிக்கு ரூ. 80 கோடியும் மானியம் முதலான வழிகளில் செலவிடுவது இறுதியில், வீண்பொருள் நஷ்டமாகத்தான் முடியுமே அல்லாது பலன் எதையும் தராது. "அம்பர் சர்க்காவை நம்பி, ஆலைத்தொழில் விரிவாவதைத் தடுத்தால் சீக்கிரத்தில் பெரும் துணிப்பஞ்சம் ஏற்படக் கூடும்"

என்று, இந்திய ஆலை முதலாளிகள் சங்கத் தலைவரான ஜி. டி சோமானி எம். பி. குறிப்பிட்டிருக்கிறார்.

'வேலை வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டுமென்ற ஆவலில் சர்க்கார், திறமையற்ற — பயனில்லாத — காலங்கடந்துபோன உற்பத்தி முறைகளைக் கையாளுகின்றனர்,' என்று குறிப்பிட்ட அவர், கைத்தறியினால், நாட்டுக்குத் தேவையான துணியை உற்பத்தி செய்ய முடியாதென்றும், கைத்தறி உற்பத்திக்கு மானியம் வழங்கிக் கொண்டேயிருப்பது சாத்தியமான ஒன்றல்ல என்றும் கூறினாராம்!

'அம்பர் சர்க்கா பெருக்கத்தைத் தடுக்கமாட்டோம்'

'மாறாக வளர்ச்சிக்கு உதவுவோம்'

பிரதமர் நேரு தரும் உறுதிமொழி

"அம்பர் சர்க்காவின் உற்பத்தி சக்தி திருப்திகரமான அளவிற்கு இருக்குமானால், சர்க்கார், அம்பர் சர்க்கா பெருக்கத்தைத் தடைசெய்யாது; மாறாக, அதன் வளர்ச்சிக்கு முழு மூச்சாகப் பாடுபடும்,"

என்று பிரதமர் நேரு, மாநிலங்கள் சபையில் உறுதிமொழி யளித்திருக்கிறார்.

'அம்பர் சர்க்கா திருப்திகரமான பலன் தருமென, கதர்—மற்றும் கிராமத் தொழில் போர்டு கருதுகிறது; ஆனால், இதுகுறித்து விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் அறிக்கையை சர்க்கார் எதிர்பார்த்துக் கிடக்கிறது' என்று அதே சபையில் பேசிய உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி குறிப்பிட்டிருக்கிறார்.

நிபுணர் குழுவின் அறிக்கை அடுத்த மாதம் வருமென்றும் அவர் தகவல் அளித்திருக்கிறார்.

'சிபாரிசுகளை சர்க்கார் அப்படியே ஏற்றுக்கொள்ளுமா?' என்று கேட்கப்பட்டபோது, நேரு பண்டிதர், 'எந்த ஒரு சர்க்காரும். அப்படி ஒரு உறுதி மொழி தர இயலாது' என்றும் பதில் தெரிவித்திருக்கிறார்.

சார்லி சாப்ளினுக்கு ரஷ்யா அழைப்பு

லண்டன், ஏப். 25—

உலக நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளினை சோவியத் ரஷ்யாவுக்கு வருமாறு புல்கானினும், குருஷ்சேவும் அழைத்திருப்பதாகத் தெரிகிறது.

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு

திருச்சியில் மே 17, 18, 19, 20-ல்

பெரிய இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள பந்தயத் திடலில் அமைந்துள்ள

"வள்ளுவர் நகரில்"

நடைபெறும்

★

தலைவர்: **இரா. நெடுஞ்செழியன்**

திறப்பாளர்: **ஜி. பி. சோமசுந்தரம்**

வரவேற்புக் குழுத் தலைவர்: **ஏ. பி. தருமலிங்கம்**

★

கலை விருந்து அளிப்போர் :

திருவாடுதுறை டி. என். இராசரத்தினம்

என். எஸ். கிருஷ்ணன்	கே. ஆர். இராமசாமி
எம். ஜி. இராமச்சந்திரன்	நாகூர் அனிபா
எஸ். எஸ். இராஜேந்திரன்	ஜி. கஸ்தூரி
டி. வி. நாராயணசாமி	பி. எஸ். செல்வா

★

கருத்து விருந்து அளிப்போர் :

அண்ணா

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்	மு. கருணாநிதி
கே. ஏ. மதியழகன்	க. அன்பழகன்	கண்ணதாசன்
சி. பி. சிற்றரசு	டி. கே. சீனிவாசன்	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
என். எஸ். இளங்கோ	கி. மனோகரன்	காஞ்சி கல்யாணசுந்தரம்
சத்தியவாணி முத்து	தில்லை வில்லாளன்	கா. அப்பாத்துரை
அருண்மொழி	எம். எஸ். இராமசாமி	அரங்கண்ணல்
ப. உ. சண்முகம்	ஏ. கோவிந்தசாமி	அ. பொன்னம்பலனார்
இரா. சு. தங்கப்பழம்	எம். பி. சுப்பிரமணியம்	ஆர். எஸ். பாண்டியன்
கே. கே. நீலமேகம்	கே. வி. கே. சாமி	அலமேலு அப்பாத்துரை
பி. ஆர் கோகுலகிருஷ்ணன்	டி. கே. பொன்னுவேலு	அலிசேக் மன்சூர்

★

மாநாட்டுக் கட்டணம் :

நான்கு நாட்களுக்கும் சேர்த்து :

		ஆண்	பெண்
1-ம் பிரிவு	ரூ.	10—0—0	10—0—0
2-ம் பிரிவு	,,	5—0—0	2—8—0
3-ம் பிரிவு	,,	3—0—0	1—8—0

தனித்தனி ஒவ்வொரு நாளும் :

		ஆண்	பெண்
1-ம் பிரிவு	ரூ.	3—0—0	3—0—0
2-ம் பிரிவு	,,	1—8—0	0-12—0
3-ம் பிரிவு	,,	1—0—0	0—8—0

தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி கட்டணம் (நுழைவு உட்பட): ரூ. 5—0—0

பொதுக்குழு உறுப்பினரல்லாதோர் வரவேற்புக் குழுக் கட்டணம்: ,, 25—0—0

எம். எஸ். மணி, எஸ். முத்து,—செயலாளர்கள்

செய்திச் சுரு

★

அழகிரி நினைவு நாள்

19—4—56 மாலை 6 மணியளவில், சென்னை - மூலகொத்தளம் அழகிரி மன்ற ஆண்டு விழாவும், அழகிரி நினைவு நாளும் தோழர் வெ. வ. வேந்தன் தலைமையில் நடைபெற்றது. முதலில் தலைவர் முன்னுரைக்குப் பின், மன்றச் செயலாளர் ஜே. எஸ். இராசன் ஆண்டறிக்கை வாசித்தார்; மன்றம் செயல்படும் முறைபற்றி விளக்கினார்.

பின்னர், தோழர்கள் நி. போ. போகேந்திரன், சி. ஆர். பாலசந்தரம், நீல. துரைக்கண்ணன், சி. பி. சிற்றரசு, காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியோர் கழக இலட்சியங்கள் குறித்து விளக்க உரையாற்றினர்.

திரு. வி. க. மறுமலர்ச்சி மன்ற பொதுக்கூட்டம்

21—4—56 மாலை 6 மணியளவில் குயப்பேட்டை (24-வது வட்டம்) எட்வர்ட் பார்க் தெருவில் தோழர் க. கோவிந்தன் தலைமையில், மேற்படி மன்றப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அது போது தோழர்கள் முகவை-ஆர். எஸ். பாண்டியன், தமிழ்தாசன் தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் நாட்டிற்குப் பயன்படத் தக்க நல்லுரையாற்றினர். செயலாளர் க. வரதன் நன்றி கூறினார்.

வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகம்

22—4—56 இரவு 9 மணிக்கு மேற்படி படிப்பக நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் செ. பாண்டியன் தலைமையில் நடைபெற்றபோது, பொருளாளராக இருந்த, எஸ். எஸ். இ. மாயில் விலகிவிட்டமையால், திரு. க. செல்லையா பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், மே மாதத்தில் ஆண்டு விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

அன்பளிப்பு

சென்னை — சூளை கலியாண மேஸ்திரி தோட்டம் தோழர் எஸ். மஞ்சனி அவர்களின் குமாரிகள் கமலவள்ளி—கெசவள்ளி ஆகியோருக்கு காதணி விழா நடைபெற்றதின் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தந்த ரூ 1, தோழியர் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் மூலம் வரப் பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

22—4—56-ல், சூளை, கல்யாண மேஸ்திரி தோட்டத்தில், தோழர் அச்சுதா அவர்களின் பெண் மகவுக்கு தோழியர் சத்தியவாணி முத்து அவர்களால் 'தாமரைச் செல்வி' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

திருமணம்

22—4—56 காலை 9-30 மணி அளவில், சூளை, நரசிங்கப் பெருமாள் கோவில் தெரு, 4-ம் எண் இல்லத்தில், தோழியர் சத்தியவாணி முத்து தலைமையில் சூளை தி மு. கழகத் துணைச் செயலாளர் அர. இரத்தினம் (தென்னவன்)—தோழியர் தெய்வயானை திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி தோழர்கள் இளம்பரிதி, வ. சங்கரநாராயணன், மற்றும் பலர் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

1953-ம் ஆண்டில் சுமார் 14,000 டன் பழப் பொருள்கள் தயாரிக்கப்பட்டன; அவற்றின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 1,58,00,000.

...ற்றவே முடியாத முடிவைச் செய்யாதீர்'

...ஷ்முக்கிற்கு பிரதமர் நேரு கோரிக்கை?

புதுடில்லி, ஏப். 26—

"மராட்டிரத்தில் பம்பாயைச் சேர்க்கும் பிரச்சினை பரிசீலனையில் இருப்பதால் மாற்றவே முடியாத முடிவு எதையும் செய்யக் கூடாது" எனப் பிரதமர் நேரு மத்திய நிதி அமைச்சர் தேஷ்முக் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுக்கொண்டுள்ளாராம்.

ரூ. 30 அபராதம்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம். அக்கம் பக்கத்து வீட்டார். இது குறித்துப் புகார் செய்யவே மாகாண நீதிபதி ஒருவர், பூனையைத் தாக்கிக் கொன்றவருக்கு இத்தனை கடுமையான தண்டனை விதித்தாராம்.

பூனையைக் கொல்லவில்லை என்று வாதாடியும், நீதிபதி பக்கத்து வீட்டாரின் சாட்சியத்தை நம்பித் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மாநில மாநாடு

தீர்மானம் அனுப்புவோர் குறித்து விளக்கம்

திருச்சியில் நடைபெறயிருக்கும் மாநில மாநாட்டிற்கு, தீர்மானங்களை அனுப்ப, பொதுக்குழு உறுப்பினர்கள் மட்டுமே உரிமையுடையவர்களாவர். ஒரு பொதுக்குழு உறுப்பினர் முன்மொழிந்தும், மற்றொரு பொதுக்குழு உறுப்பினர் வழிமொழிந்தும் அனுப்புதல் வேண்டும்.

பொதுக்குழு உறுப்பினரல்லாதவர்கள் தீர்மானம் அனுப்ப விரும்பினால், சம்மந்தப்பட்ட மாவட்டத்திலுள்ள பொதுக்குழு உறுப்பினர்களில் ஒருவர் முன்மொழிந்தும், மற்றொரு உறுப்பினர் வழிமொழிந்தும் அனுப்பி வைக்கலாம்.

மேற்கண்டவாறு அனுப்பப்படும் தீர்மானங்கள் மட்டுமே, பொதுக்குழுவின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தீர்மானங்களை, **10—5—56**-க்குள், 'வரவேற்புத் தலைவர், தி. மு. கழக மாநில மாநாடு, 9, கிலேதார் தெரு, தெப்பக்குளம், திருச்சி' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

—விளம்பரக் குழு

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பீகாரில்சேர்ந்துள்ள வங்கப் பகுதிகளின் எதிர்காலம்

'உடனடியாக வங்கத்துடன் இணைத்தாக வேண்டும்'

மேற்கு வங்க காங்கிரஸ் செயற்குழு முடிவு

கல்கத்தா, ஏப். 23—

மேற்கு வங்கத்துடன் சேர்த்துவிடுவது என்று இந்திய அரசாங்கத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கும் பீகாரைச் சேர்ந்த பகுதிகளை மேற்கு வங்கத்துடன் உடனடியாகச் சேர்த்துவிடுவதற்கு வழி செய்யும் புது மசோதா ஒன்றைப் பீகார், மேற்குவங்க புனரமைப்புக்காக பாராளுமன்றத்தில் கொண்டுவரவேண்டும் என்று மேற்குவங்க மாகாணக் காங்கிரசுச் செயற் குழு கூறியுள்ளது.

மேற்குவங்கம், பீகார் ஆகிய மாகாணங்களை இணைக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இக்குழு அதனுடைய தீர்மானம் ஒன்றில் கூறுகிறது

"மேற்கு வங்கத்தையும் பீகாரையும் இணைக்கும் திட்டத்தின்படி இரு மாகாணங்களும் தொடர்ந்து தனி அரசாங்கங்களையே கொண்டிருக்கும் என்றும், இரு மாகாணங்களின் நலன்களும் சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட காரியங்கள் பற்றிச் சட்டம் இயற்ற கூட்டுச் சட்ட சபை அமைக்கப்படும் என்றும் நாங்கள் கருதுகிறோம்" என்று இக் குழு நிறைவேற்றியுள்ள தீர்மானம் கூறுகிறது.

ரஷ்யா வாங்குமென நம்புகிறாராம்!

இந்தியாவின் நார்ப்பாய்கள் ஏற்றுமதியாகுமா?

புதுடில்லி, ஏப் 26—

இந்தியாவிலிருந்து சோவியத் ரஷ்யா கணிசமான அளவுக்கு கை நுட்பவேலைப் பொருட்களை வாங்க தீர்மானித்துள்ளதாம்.

'இதில், நார்ப்பாய்கள் வாங்குவதும் அடங்குமா?' என்று, மக்கள் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், வர்த்தக அமைச்சர் டி. பி. கர்மார்கர் 'நார்ப்பாய்களை ஏற்றுமதி செய்ய நாம் விரும்புகிறோம்; இவற்றில் சிலவற்றை நம்மிடமிருந்து ரஷ்யா வாங்குமென நான் எதிர்பார்க்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

நூல் நூற்பவர்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள் கண்டு பிடிப்புகள், நல்லவை தான்: ஆனால் அவருடைய அம்பர சர்க்கா இரண்டு மூன்று அவசியமான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாயிருக்க வேண்டும்.

"முதலாவதாக அது, ஒரு சராசரி கிராமவாசியின் கைக்கு எட்டாததாயிருக்கக் கூடாது. இரண்டாவதாக, அம்பர் சர்க்காவின் பாகங்கள் கிராமத்திலேயே சுலபமாகக் கிடைக்கக் கூடியனவாயிருக்க வேண்டும்; அதாவது, கிராமத்தில் உள்ள கருமானும், தச்சனும் உற்பத்தி செய்யக் கூடியவையாக இந்தச் சர்க்காவின் பாகங்கள் அமைய வேண்டும் மூன்றாவதாக, கிராமமக்கள் தங்களுக்குள்ள சாதாரணத் தொழில் அனுபவத்தைக் கொண்டே இயக்கக்கூடியதாக இந்த சர்க்கா அமையவேண்டும்.

மாநில சீரமைப்பு மசோதா

மக்கள் சபை முடிவு

புதுடில்லி, ஏப். 26—

மாநிலச் சீரமைப்பு மசோதாவை இரு சபைகளின் கூட்டுப் பரிசீலனைக்கு விடுவதென மக்கள் சபை முடிவு செய்திருக்கிறது.

கூட்டுத் தணிக்கைக் குழு 51 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்குமென்றும், மே 14-ந் தேதிக்குள் அக்குழு அறிக்கை ஒப்படைக்கும் என்றும் அமைச்சர் பண்டித பந்த் தெரிவித்திருக்கிறார்.

தடை விதிக்கப்படாவிடில்!

100 கோடி பவுன் பொருள்களை பிரிட்டனிடமிருந்து ரஷ்யா வாங்குமாம்

லண்டன், ஏப் 28—

"அடுத்த ஐந்தாண்டுகளில் பிரிட்டன் தடைகள் எதுவும் விதிக்காமலிருந்தால் 100 கோடி பவுன் மதிப்புள்ள பொருள்களை பிரிட்டனிடமிருந்துபெற ரஷ்யா முன்வந்துள்ளது. கம்யூனிஸ்டுகளுக்கு விற்பதற்கு மேற்கத்தியர் விதித்திருக்கும் தடையில் சேராத பல பொருள்கள் இதில் அடங்கும்" என்று, பிரிட்டிஷ்—ரஷ்யத் தலைவர்களிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைப் பற்றிய கூட்டு அறிக்கை ஒன்று கூறுகிறது.

கிராம மின்சார வசதித்திட்டங்களுக்காக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூபாய் 75 கோடி ஒதுக்கப்படும்.

பொன்னேரி வட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்களுக்கு:

29—4—56 காலை 10 மணியளவில், பொன்னேரி தி மு. க. அலுவலகத்தில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

சென்னை—2-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்களுக்கு:

29—4—56 காலை 9 மணியளவில், தோழர் சம்பந்தம் இல்லத்தில் (எண் 45, வெங்கடாசல நாய்க்கன் தெரு, இராயபுரம்) பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது, மாநில மாநாட்டுப் பிரதிநிதி தேர்வும், மற்றும் பல பிரச்சினைகளும் ஆய்வுக்கு வரும்.

சென்னை—5-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்களுக்கு:

29—4—56 காலை 8 மணியளவில், கிளைக் கழகத்தை அடுத்துள்ள இல்லத்தில், கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, பொதுக்கூட்டம், மாநில மாநாட்டுத் தீர்மானங்கள் பற்றி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை—50-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்களுக்கு:

29—4—56 காலை 9 மணியளவில், கழகப் பணிமனையில், கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது மாநில மாநாட்டிற்குப் பிரதிநிதி தேர்வு நடைபெறும்.

திருமணங்கள்

29—4—56 காலை 8-30 மணியளவில், பெரியகாஞ்சீபுரம், கீழண்டை ராஜ வீதி, யாதவர் சத்திரத்தில், தோழர் வெங்கிடேசன்—தோழியர் சரோஜா திருமணம், காஞ்சீபுரம் நகர சபைத் தலைவர் திரு. வி. என். பெருமாள் (நாயுடு) தலைமையில் நடைபெறும். அண்ணா, தோழர்கள் எஸ். தெய்வசிகாமணி, எம். எல். ஏ., சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சி - கல்யாணசுந்தரனார் வாழ்த்துரை வழங்குவர்.

29—4—56 காலை 7 மணியளவில், சென்னை - புளியந்தோப்பு குட்டித் தம்பிரான் தெரு, எண். 30 இல்லத்தில், தோழர் காஞ்சி - கல்யாணசுந்தரனார் தலைமையில், 18-வது வட்ட தி. மு. க. துணைச் செயலாளர் தோழர் கே. சுப்பிரமணி—தோழியர் கோமளா வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். தோழர்கள் மா. நன்னன், இளம்பரிதி வாழ்த்துரை வழங்குவர்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை 16-வது வட்டம்
வால்டாக்ஸ் ரோடு திடலில்
(தூனைக்கவுனி போலீஸ் நிலையம் அருகில்)
29—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: சி. பஞ்சாட்சரம்
பேசுவோர்: அண்ணா, அரங்கண்ணல், கோ. செங்குட்டுவன்
குறிப்பு:—கூட்டத்தில், 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 100 நிதியளிப் பாகத் தரப்படும்.

★

வளவனூர்
பழைய சினிமா திடலில்
29—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஏ. கிருஷ்ணமூர்த்தி
பேசுபவர்: ஈ. வெ. கி. சம்பத்

★

திருவெண்காடு
மேல வீதியில்
29—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். கோபால்சாமி
பேசுவோர்: மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ, சோர்ணம்

★

கட்டிமேடு
கடை வீதி (சத்திரம் அருகில்)
29-4-56 மாலை 5-30 மணிக்கு
தலைவர்: ப. வீராசாமி
பேசுவோர்: சத்தியவாணிமுத்து, வி. ஆர். எம். சுல்தான்

★

திண்டுக்கல்
வ. உ. சி. திடலில்
29—4—56 இரவு 7 மணிக்கு
தலைவர்: ஏ. சுப்பையா
பேசுபவர்: அருண்மொழி

★

செம்பனார்கோயில்
திலகர் திடலில்
30—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: சி. ஐம்பு
பேசுவோர்: மு. கருணாநிதி, என். கிட்டப்பா

★

கீரனூர்
பொதுச்சாவடி மைதானம்
தி மு கழகத் துவக்க விழா
30—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: சுவாமி சிவநேசம்
பேசுபவர்: க. அன்பழகன்

ஆங்கில ஒலிபரப்புகள் நிறுத்தப்படுமாம்

கொழும்பு, ஏப். 26—

இலங்கை வானொலியில் ஆங்கில ஒலிபரப்புகள் அடுத்த ஆண்டு முதல் அறவே நிறுத்தப்படுமென்றும், முதல் கட்டமாக வானொலியில் ஆங்கில மொழிக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தை அடுத்தத் திங்கள் முதல் 4 மணி நேரத்திலிருந்து 2 மணி நேரமாகக் குறைப்பதற்கு சர்க்கார் முடிவு செய்திருக்கிறதென்றும் செய்திகள் கூறுகின்றன.

தேசிய மொழியான சிங்களத்துக்கு ஊக்கமளிக்கும் கொள்கையை அனுசரித்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதெனத் தெரியவருகிறது.

மாநில மாநாட்டில் ஓவியக் காட்சி

கழகத் தோழர்களின் கவனத்திற்கு:

திருச்சி மாநில மாநாட்டில் நடைபெறவிருக்கும் ஓவியக் காட்சியில், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்கள் தங்கள் ஊர்களில் நடைபெற்ற கழக நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட படங்களைக் கொண்டுவந்து சிறப்பித்துவிட்டு, மீண்டும் எடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கோள்கிறோம்.

—விளம்பரக் குழு

பாரதிதாசன், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை விழா

28—4—56 மாலை 6-30 மணியளவில், சூளை, நகர இளைஞர் கழகச் சார்பில், மாணிக்கச் செட்டித் தெரு, கழக மனையில் மேற்படி விழா நடைபெறும் தோழர்கள் சுரதா, பி. எம். வேதகிரி பேசுவர்.

அவ்வை விழாவும்—ஆண்டு விழாவும்

சென்னை-கோடம்பாக்கம், சூளைமேடு ஆரம்பப் பள்ளியின் ஆண்டு விழா திரு டி பார்த்தசாரதி எம். சி. தலைமையிலும், அவ்வை விழா தோழியர் என். ஜானகி தலைமையிலும், 29—4—56 மாலை 4 மணியளவில், பள்ளி எதிரில் நடைபெறும். பள்ளிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு எம் இராதாகிருஷ்ண பிள்ளை பரிசுகள் வழங்குவார்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

28—4—56 இரவு 7-30 மணியளவில், சென்னை—கொருக்குப் பேட்டை, நாகப்ப நாயகன் தெரு, எண். 15 கழகப் பணி மனையில், தோழர் சி. வே. க வேலன் தலைமையில் 'இலட்சியம்' என்னும் பொருள் பற்றி கழகத் தோழர்கள் பேசுவர்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

பனைமரத்தொட்டி சிவசுப்பிரமணியசுவாமி கோவில் மண்டபத்தில் 29—4—56 காலை 9.30 மணிக்கு, ஓர் இலக்கிய சொற்பொழிவுக் கூட்டம் திரு. கு பெ. துரைசாமி தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் ம. பொ. கேசவராமன், அ. ஆடியபாதம், நா. சண்முகனார், ம. செல்வராசன் ஆகியோர் பல தலைப்புகளில் பேசுவர்.

சூளை நகர இளைஞர் கழகம்

29—4—56 காலை 9 மணிக்கு, திரு. வி. என். கிருட்டிணன் தலைமையில் சுகாதார ஊர்வலம் ஒன்று கல்யாணமேஸ்திரி தோட்டத்திற்குச் சென்று சுகாதாரப் பணியாற்றும். அவ்வமயம் இலவசமாகப் பால் வழங்கப்படும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

28—4—56 மாலை 6-30 மணியளவில், வட சென்னை குறள் நெறிக் கழகத்தில், தோழர் கா. ஆனந்தன் தலைமையில், 'ஆத்திகமும்—நாத்திகமும்' என்ற தலைப்பில், தோழர்கள் ம. முகமதலி, ப. கோ. வீரராகவலு பேசுவர். அதுபோது, கழக அறையில், நிர்வாகக் குழுத் தேர்வும் நடைபெறும்.

இராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம. ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிட்டப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ